*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – VI Issue - 2
May -2022

# தமிழ்ச் சிறுகதைகளும் பெண்மையத் திறனாய்வும்

அமுதவல்லி, ம.ந.
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.

**Corresponding author: amuthavalli@vvvcollege.org**

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய காலகட்டத்தில் இலக்கியத்தில் மேற்கொள்ளப்படும் திறனாய்வு முறைகளுள் ஒன்று பெண்ணியத் திறனாய்வு முறையாகும். அவற்றின் வகைகளுள் ஒன்று பெண் மையத்திறனாய்வு என்பதாகும். பெண் மையத் திறனாய்வு என்பது பெண்களின் படைப்பைப் பெண்ணியப் பார்வையில் பெண் திறனாய்வாளர்களே ஆராய்வதாகும். இம்முறை ஆங்கிலத்தில் 'கைனோ கிரிட்டிசிசம்' என்று அழைக்கப்படுகின்றது. இத்தகைய பெண்மையத் திறனாய்வில் குறிப்பிடத்தக்கவர் மேலைநாட்டைச் சேர்ந்த 'எலைன் ஷோவால்டர்' என்ற பெண்ணியச் சிந்தனைவாதியாவார். இவருடைய திறனாய்வின் கூறுகள், 'பெண்களின் அனுபவங்களை ஆராய்வதின் மூலம் பெண்ணுக்குரிய புதிய மாதிரிகளை வடிவமைத்தல், பெண் எழுத்துக்களைப் பற்றிப் பெண்கள் மட்டுமே திறனாய்வு செய்தல், பெண் எழுத்துக்களின் நடை, கரு, வகை அமைப்பு, உளவியல் சார்ந்த தன்மைகளைத் திறனாய்வு செய்தல், பெண்களுக்கு உரிய ஒரு மொழியைப் பற்றிய கருத்தாக்கத்தை வடிவமைப்பில் கொண்டு வருதல்' போன்றவையாகும். மேலும், இவர் தனது நூலான 'அவர்களுக்கான இலக்கியம்' என்ற நூலில் இலக்கியங்களில் இடம் பெறும் பெண் பாத்திரங்களின் நிலைப்பாட்டினை மூன்று வகையாகப் பாகுபடுத்தியுள்ளார். பெண்மை நிலை இலக்கியம், பெண்ணிய நிலை இலக்கியம் மற்றும் பெண்நிலை இலக்கியம் என இப்பாகுபாட்டில் பெண்ணியநிலை இலக்கியம் என்ற அடிப்படையில் முனைவர் இரா.பிரேமா

அவர்களால் தொகுக்கப்பட்ட 'பெண்ணியக்கதைகள் (சிறுகதைத் தொகுப்பு) என்ற தலைப்பில் அமைந்த கதைகளில், இராஜம் கிருஷ்ணனின் 'தனிமை', ஜோதிர்லதா கிரிஜாவின் 'அம்மாவின் அந்தரங்கம்', மற்றும் பாமாவின் 'பொன்னுத்தாயி', ஆகிய மூன்று கதைகள் ஆய்வுப்பொருளாகின்றன. இச்சிறுகதைகளில் அமைந்துள்ள பெண் பாத்திரங்களின் வாழ்வியலை பெண் மையத் திறனாய்வின் அடிப்படையில் ஆராய்வதே ஆய்வின் சாராம்சமாகும்.

**குறிப்புச்சொற்கள்: பெண் மையத் திறனாய்வு, பெண்ணிய நிலை இலக்கியம், பெண்களின் வாழ்வியல், சொல்லாடல்கள், பெண்ணியக்கதைகள்.**

## முன்னுரை

'பெண்ணியக் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு முனைவர் இரா.பிரேமா அவர்களால் தொகுக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு வெளி வந்தது. இத்தொகுப்பில் பெண்ணியச் சிந்தனைகள் நிறைந்த இருபத்தி ஐந்து எழுத்தாளர்கள் எழுதிய இருபத்தி ஐந்து சிறுகதைகள் அமைந்துள்ளன. இக்கதைகள் ஒவ்வொன்றும் பெண்களின் வாழ்வியலை எடுத்துரைக்கின்றன. தந்தை வழிச் சமூகத்தில் மரபுவழிப்பட்டு அடிமைகளாக வாழும் பெண்களின் வாழ்வியல் நிலைப் பாடுகளையும், மரபுக்கட்டுப்பாடுகளைக் கட்டுடைத்து மீறத் துடிக்கும் பெண்களின் வாழ்வியல் நிலைப் பாடுகளையும் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. இக்கதைகளைப் பெண் மையத் திறனாய்வின் பாகுபாடுகளுள் ஒன்றான, 'பெண்ணிய நிலை இலக்கியங்கள்' என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் அதாவது "தமக்கு எதிரான சட்டங்களை, சமூக அமைப்புக்களை, ஆணாதிக்க வெறியை எதிர்த்துக் குரல் கொடுக்கும் தன்மையாக அமைந்திருந்தன"[1] என்ற தன்மையில் ஆய்வு செய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## தந்தை வழிச்சமூகத்தின் மரபு ரீதியான கட்டமைப்பை எதிர்க்கும் தன்மை

கொள்ளி வைத்தல் என்னும் சடங்கு முறை பாலினப்

பாகுபாட்டு அடிப்படையில் சமூகத்தில் அமைந்திருக்கும் தன்மையைத் ‘தனிமை’ சிறுகதையில் இராஜம் கிருஷ்ணன் விளக்குகின்றார். இச்சிறுகதையில் இடம் பெறும் கதைத் தலைவி பிரேமாவிற்கு இரண்டு பெண்பிள்ளைகள். மூத்தவள் ரஜனி, இளையவள் உதயா. பிரேமாவின் கணவர் தாவரவியல் பேராசிரியர். மலைப்பகுதிக்கு ஆராய்ச்சிக்காகச் சென்ற இடத்தில் பாம்பு தீண்டி உயிர் இழந்து விடுகின்றார். இறந்தவரின் தங்கை தன் மகன் தான் கொள்ளி வைக்க வேண்டும் என்று கூறுகின்றாள். இதனைக் கேட்டவுடன் ரஜனி கொதித்தெழுந்தாள்.

> **‘என்னது எங்கப்பாவுக்குக் கொள்ளி போட**
> **உம்புள்ளயா? எதுக்கு எங்கப்பாவுக்கு நாங்க**
> **ரெண்டு பேர் இருக்கோம் அந்திமம் செய்ய’ (ப.5)**

என்று தனது உரிமையை நிலை நாட்டும் விதத்தில் பேசினாள். ஆண்தான் கொள்ளி போட வேண்டும், பெண் கொள்ளி போடக் கூடாது என்ற தந்தைவழிச் சமூகத்தின் அடக்கு முறையை எதிர்த்துக் கலகக்குரல் எழுப்பினாள். ரஜனி இயல்பிலேயே ரோசக்காரியாகவும், யாருக்கும் அஞ்சாத நேர்த்தி கொண்டவளாகவும் வளர்ந்திருந்தாள். அக்கூட்டத்தில் அவள் எத்தகைய எதிர்ப்புணர்ச்சியைக் காட்டிய சூழலிலும் அவள் பேச்சு எடுபடவில்லை. சமூகத்தின் அடக்கு முறைக்கு அடங்கியே வாழ்க்கையை வாழப் பழகிப் போன அவளது தாய் பிரேமாவும் மகளுக்குச் சார்பாக எதுவும் பேசாமல் செயலற்றுப் போனாள். அக்கூட்டத்தில் இருந்த அனைவரும், புரோகிதர் உட்பட அனைவரும் ஒரு ஆண் ஈமச்சடங்கு செய்வதையே விரும்பினர். பெண் செய்வதற்கு அனுமதிக்கவில்லை.

ரஜனியை அவளது அத்தை மகன் சோமு வீட்டில் உள்ள அறையில் வைத்துப் பூட்டினான். ஒரு மருத்துவரை அழைத்து வந்து ரஜனிக்குக் காம்போஸ் ஊசி போட வைத்தனர். ஈமக்கடன் முழுவதையும் சோமுவே செய்தான். ரஜனி மயக்கந் தெளிந்து எழுந்ததும், நடந்ததை அறிந்து கோபம் கொண்டாள்.

"பெற்ற தகப்பனுக்கு அந்திமம் செய்யப்
பெண்ணுக்கு உரிமை இல்லை என்று வந்த அந்த
புரோகிதனைக் கழுத்தை நெரித்திருப்பேன்! என்ன
சமூகம். என்ன விதி!" (ப.7)

என்று மனம் வருந்திப் பேசுகின்றாள். தந்தைவழிச் சமூகத்தின் மரபு ரீதியான கலாச்சாரக் கட்டுமானத்தைக் கட்டுடைக்க முயலும் ஒரு பெண்ணின் செயல்பாடு அதிகார வர்க்கத்தினால் அடக்கப்படும் தன்மையினை இக்கதையில் இராஜம்கிருஷ்ணன் எடுத்துரைக்கின்றார். எதிர்த்துப் பேச இயலாத தன் தாயின் நிலையை எண்ணியும் மனம் வெதும்புகின்றாள். பாலினப் பாகுபாட்டு அடிப்படையில் சமூக நெறிமுறைகள் அமைந்துள்ளதை இச்சிறுகதை உணர்த்துகிறது.

**பெண்ணின் கற்பொழுக்கத்தைச் சந்தேகித்தல்**

பெண்ணியக் கதைகள் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஜோதிர்லதா கிரிஜாவின் 'அம்மாவின் அந்தரங்கம்' என்ற கதை குடும்பத் தளத்தில் ஒரு பெண்ணின் கற்பினை அவளது கணவன் சந்தேகிக்கும் சூழலில் அப்பெண் கணவனை எதிர்த்துச் சொல்லாடல் நிகழ்த்துவதை உணர்த்துகிறது.

'அம்மாவின் அந்தரங்கம்' என்ற சிறுகதையில் கணவன் தன் மனைவியைச் சந்தேகப்படுகின்றான். அதை அவள் யாரிடமும் சொல்லவில்லை. தனது இரண்டாவது மகன் ரமணன் தனக்குப் பிறக்கவில்லை என்று எண்ணித் தன் மனைவியை வீட்டிற்குள்ளே ஒதுக்கி வைத்து விடுகின்றான். இதனை எண்ணி மனைவி மனம் வருந்துகிறாள். ஒரு நாள் அவள் தனது மூத்தமகளிடம், "பாலா உனக்கு விவரந் தெரியற வயசு வந்ததுக்கு அப்புறம் அந்த விஷயத்தைச் சொல்லணும்னு இருந்தேன். இன்னிக்கு அதுக்கு நேரம் வந்துடுத்து. இப்ப வந்துட்டுப் போனாரே, அவரையும் என்னையும் சந்தேகப்பட்டுண்டு தான், அப்பா என் கூட பேசுறதையே நிறுத்திட்டார். சொல்றதுக்கே வாய் கூசறது….. ரமணன் தனக்குப் பிறந்த பிள்ளை இல்லேன்னு உங்கப்பாவுக்கு எம் மேலே சந்தேகம். அதுக்கு ஏத்த மாதிரி

அவன் குள்ளமா வேற இருக்கானா? அதனாலே அப்பா சர்வ நிச்சயமா இருக்கார். ரமணன் தனக்குப் பிறக்கலேன்னு.... உங்கப்பாவும் நானும் நல்ல உயரமாச்சே! அதனாலே.....”(ப.24) என்று மகளிடம் கூறி மனம் கலங்கி, வருந்தினாள். மேலும் தன்னுடைய தாத்தாவைப் போலத் தன் மகன் இருக்கிறான் என்றும் மகளிடம் கூறினாள். ஆனால் இதனைக் கணவனிடம் கூற அவள் விரும்பவில்லை.

மறுநாள் ஊரில் இருந்து வந்த தன் நாத்தனாரிடம் தன் கணவன் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை பற்றிய விவாதத்தில் இருப்பதைக் கண்டாள். அவள் கணவன் அவனுடைய தங்கையிடம், ‘பாவம் பண்ணினா அதன் சுமையைப் பொண்ணு தான் சுமக்க வேண்டியிருக்கு. ஆண் சுலபமாகத் தப்பிச்சுடறான். இதைப் பார்க்கறச்சே பெண்ணாப் பொறக்கறது மகாப் பாவம்னு தான் தோன்றது. தாய்மைங்கறது ஒரு சாபக்கேடு தான்’ (ப.28) என்று கூறியவுடன் மனைவி அதற்குக் கம்பீரமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் பதில் பேசினாள்.

“இருக்கலாம், தன் பெண்டாட்டிக்குப் பிறந்த குழந்தை தன் குழந்தைதான்கிற நிச்சயம் ஆம்பிளைக்கு இல்லே, அடுத்தாப்லே, தன் குழந்தையைத் தானே சுமக்கிறா பொண்ணு. தன் குழந்தைதான் அதுங்கிற நிச்சயம் அவளுக்கு இருக்கு. இந்த விஷயத்திலே சபிக்கப்பட்டது ஆம்பளைதான்னு நான் நினைக்கிறேன்” (ப.28) என்று பதில் பேசியவுடன் கணவனின் முகம் மிகவும் சிவந்தது. அவன் எந்தப் பதிலும் பேசவில்லை. இப்பெண் குடும்பத்தளத்தில் கணவன் பேசும் குத்தல் பேச்சுக்களைச் சமயோசிதமாக எதிர்க்கும் சக்தி பெற்றவளாக விளங்குகின்றாள். தன் தாத்தா குள்ளமாக இருப்பதால் தான் தன் மகன் குள்ளமாக இருக்கிறான். தான் எந்த விதத்திலும் தவறு செய்யவில்லை என்பதில் உறுதிப்பாடுடையவளாக இருந்தாள். இதனை அவளுடைய மூத்த மகள், தன் தந்தையிடம் கூறவேண்டியது தானே என்று கூறிய போது,

"பன்னண்டு வருஷமா உங்கப்பா என்னை ஆத்துக்குள்ளேயே தள்ளி வெச்சுக் கொடுமைப்படுத்திண்டிருக்கார். அவர் சுடு சொல்லாலே என்னைத் தாக்காத நாளே இல்லேங்கலாம். ரமணன் தன் குழந்தை இல்லியோங்கற சந்தேகத்தாலே அவரும் மறுகிண்டே இருக்கார். இப்பப் போய் என் நிரபராதித்தனத்தை நிரூபிக்கிறதுனாலே அவர் என்னைக் கொடுமைப் படுத்தினதெல்லாம் இல்லைன்னு ஆயிடுமா? நெஞ்சிலே அடி விழலேன்னு தான் ஆயிடுமா? என்னை இந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தற உங்கப்பாவுக்குத் தண்டனை என்ன தெரியுமா? ரமணன் தன் குழந்தை இல்லைங்கற நினைப்பாலே உள்ள எரிச்சலும் அருவெருப்பும் தான். அந்த எரிச்சலிலே அவர் காலம் முழுக்க கழியட்டும்" (பக்.28) என்று கூறினாள். உண்மையைச் சொல்லாமலே தனது கற்பொழுக்கத்தைச் சந்தேகித்த கணவனின் மனது நிம்மதியில்லாமல் இருக்கட்டும் என்று தனது செயலின் வாயிலாக எதிர்க்க முயலும் ஒரு பெண்ணின் மனத்திண்மையை இக்கதையின் மூலம் ஜோதிர்லதா கிரிஜா உணர்த்துகின்றார்.

**ஆணாதிக்கத்தை எதிர்த்தல்**

'பெண்ணுக்கு அழகு எதிர் பேசாதிருத்தல்' என்பது தமிழகத்தில் வழங்கும் பழமொழியாகும். பெண்கள் குடும்பத்திலோ அல்லது வேலைத் தளத்திலோ நடக்கும் தவறுகளை எதிர்த்துப் பேசும் போது அவர்களின் செயல்கள் எள்ளி நகையாடப்படுகின்றன. பெண்ணை அடிமையாக, உடைமைப் பொருளாக, இரண்டாம் பாலினமாகக் கருதும் போக்கு சமூகத்தில் காணப்படுகின்றது. பெண்ணியக் கதைகள் தொகுப்பில் அமைந்துள்ள பாமாவின் 'பொன்னுத்தாயி' கதையில் இடம் பெறும் பொன்னுத்தாயி முப்பத்திரெண்டு வயதானவள். அவளது கணவனின் பெயர் மூக்காண்டி. இருவருக்கும் நான்கு ஆண் குழந்தைகள். பொன்னுத்தாயி கூலி வேலைக்குச் செல்லாமல் பொருள்களை வாங்கி வியாபாரம் செய்வாள். அவள் கணவன் தான் உழைக்கும் பணத்தைக் கடையில் சாப்பிட்டும், குடித்துமே

காலியாக்கி விடுவான். வீட்டில் பால்மாடு ஒன்று இருந்தது. அதனையும் விற்று அப்பணத்தைத் தானே வைத்துக் கொண்டான். இதனால் ஏற்பட்ட சண்டையில் பொன்னுத்தாயி தன் வீட்டை விட்டு வெளியேறித் தாய் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். குழந்தைகள் நான்கு பேரையுமே தன் கணவனிடம் விட்டு விட்டு வந்து விட்டாள். பிள்ளைப்பாசம் இல்லையென்று ஊரில் பலரும் பலவிதமாய்ப் பேசினார்கள். பொன்னுத்தாயி தன் மனத்திற்குள், “பிள்ளைக என்ன எனக்கு மட்டுமா பிள்ளை? அவன் அக்குருமத்தத் தணிக்கத் தான் வருசயாய் பிள்ளைகளைப் பெற வச்சான். ரெண்டு பிள்ளைக்குப் பிறகு கர்ப்பத்தட செய்யலாம்னு போனதுக்கு உடமாட்டம்னு வம்பு பண்ணிக் கூட்டியாந்தான். இப்ப அவனே வச்சு வளத்துப் பாக்கட்டும்” (ப.112) என்று பேசிக் கொண்டாள்.

“தாய்மை தான் எல்லாத் தளங்களிலும் பெண்ணை ஆண் மேலாண்மை புரிவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கக் கூடிய ஓர் அரசியல் நிறுவனமாகவும் விளங்குகிறது”[2] என்ற அட்ரீன்ரிச்சின் கூற்றுக்கு மாறாகப் படைக்கப்பட்டவள் பொன்னுத்தாயி. பொன்னுத்தாயியின் கணவன் மூக்காண்டியால் குழந்தைகளை வைத்துக் கொண்டு சமாளிக்க இயலவில்லை. அதனால் அவன் ஒரு நாள் பாதையில் பார்த்து அவளை வழி மறித்து, வீட்டிற்கு வா என்று அழைத்தான். அவள் வர முடியாது என்று மறுத்தாள்.

“ஒரு பொட்டச்சிறுக்கி ஆம்பளயப் பாத்து சேந்து வாழப் பிடிக்கலன்னா சொல்ற? ங்கோத்தா கொள்ளு, நீயெல்லாம் ஒரு பொம்பள தானா? பெத்த பிள்ளைகள வேகாரிக்கு உட்டுட்டு வெவுசாரியாத் திரிற நாயி” (ப.113) என்று சொல்லத்தகாத வார்த்தைகளால் திட்டினான். அடித்தான்.

‘வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் பெண்ணை – அவள் உரிமையைக் கேவலப்படுத்தும் ஆண்நலச் சமூகம், அவள் மேல் செலுத்துகின்ற பெரிய வன்முறையின் உச்சமாக விளங்குவது கை நீட்டி

அவளை அடித்து உதைப்பதாகும், அப்படி உதைப்பதையே தனக்குத் தரப்பட்ட உரிமையாகக் கொண்டாடுவதுமாகும்'.[3] என்ற க.பஞ்சாங்கத்தின் கூற்றுப்படி அவள் தலையில் இருந்து இரத்தம் வரும் அளவிற்கு அடித்தான். அவள் போலீஸ் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தாள். போலீசார் மூக்காண்டியை அழைத்து விசாரித்தனர். அவனை மிரட்டி அனுப்பினர். ஊரில் உள்ள அனைவரும் பொன்னுத்தாயியைத் தூற்றினர். பெற்றோர்களும் கணவனோடு சேர்ந்து வாழுமாறு வற்புறுத்தினர். மூக்காண்டி குழந்தைகளை அவளிடம் கொண்டு வந்து விடுவதிலேயே குறியாக இருந்தான்.

"பிள்ளைகளக் கொண்டாந்து எதுக்கு இங்க உடணும்ங்கற? ஒம்பிள்ளைகள் நீயே வச்சுக் காப்பாத்து. எனக்கு நீயும் வேண்டாம். ஒன்னால வந்த பிள்ளைகளும் வேண்டாம். பெத்தவா தான் பிள்ளைகள் வளக்கணும்னு சட்டமா என்ன? இங்க கூட்டியாராத. இனி இந்த பக்கமே நீ தாலயக் காட்டாத சொல்லிட்டேன் ஆமா" (ப.117) என்ற அவனது ஆதிக்க உணர்வை எதிர்த்துச் சொல்லாடல் நிகழ்த்தினாள்.

"தந்தை வழிச் சமூகம் தன் மேல் சுமத்தியுள்ள அடையாளங்களை அழிக்க வேண்டுமென்றால் பெண் தனக்கான மொழியை உருவாக்க முயல வேண்டும், மொழி உலகிற்குள் இவள் அசைக்க முடியாத ஆற்றலைப் பாய்ச்ச வேண்டும் பெண்கள் புதிய சொல்லாடல்களை உருவாக்குவதுடன், பெண்கள் தங்களை வரையறைக்குள் நிறுத்தும் சொல்லாடல்களைக் கேள்விக்குட்படுத்த வேண்டும்"[4] என்ற தன்மையில் பொன்னுத்தாயி பேசினாள். அவன் ரோசத்துடன் வெளியேறினான். பொன்னுத்தாயி அவன் சென்றவுடன் தாலிக்கயிற்றை அறுத்து அதில் இருந்த தாலியை உருவினாள். இதனைக் கண்ட தாய் பொன்னுத்தாயியைத் திட்டினாள் அழுதாள். ஆனால் பொன்னுத்தாயி எதனையும் கண்டு கொள்ளவில்லை. 'ஏமா நீ இப்படி ஒப்பாரி வைக்குற.

நிப்பாட்டிறியா என்ன? என்ன நடந்து போச்சுன்னு இப்படி ஏழூருக்குக் கேக்கும்படியா ஒப்பாரி வைக்க? (ப.118) என்று கூறிவிட்டுத் தாலியை எடுத்துக் கொண்டு டவுனுக்குச் சென்றாள். அதனை விற்ற பணத்தில் ஊர்ச்சாவடிக்கு முன்னால் கடையைப் போட்டு வியாபாரம் செய்ய ஆரம்பித்தாள். கணவனின் அடிக்கும், உதைக்கும், சுடுசொற்களுக்கும் ஆளான பெண் கணவனும் வேண்டாம், அவனால் வந்த குழந்தைகளும் வேண்டாம் என்று துச்சமெனத் தூக்கி எறியும் மனத்திண்மை பெற்றிருப்பதைப் பாமா இப்பாத்திரப்படைப்பின் வாயிலாக எடுத்துரைக்கின்றார்

## தொகுப்புரை

குடும்பத்தில் ஆண்மகன் தான் பெற்ற தாயோ, தகப்பனோ இறந்த பின்பு கொள்ளி வைக்க வேண்டும் என்ற எழுதப்படாத சமூகச்சட்டம் சமூகத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கொள்ளி வைத்தல் என்ற உரிமை பெண்ணிற்கும் வேண்டுமென்று பெண் கலகக் குரல் எழுப்புவதை இராஜம் கிருஷ்ணனின் 'தனிமை' சிறுகதை உணர்த்துகிறது.

குடும்பத்தளத்தில் பெண்ணின் கற்பு ஆணால் சந்தேகத்திற்கு உள்ளாகும் சூழலில் அதனை நிரூபிக்கச் சான்றுகள் இருந்தும், தனது கணவன் அவனது தவறான எண்ணத்தாலே எரிச்சலும், அருவெறுப்பும் அடைந்து நிம்மதியில்லாமல் இருக்கட்டும் என்ற பெண்ணின் மனத்திண்மையை "ஜோதிர்லதா கிரிஜாவின் 'அம்மாவின் அந்தரங்கம்' என்ற சிறுகதை விளக்குகிறது.

குடும்பத்தளத்தில் ஆணாதிக்க உணர்வுகளையும், செயல்பாடுகளையும் எதிர்க்கும் திறம் கொண்ட பாத்திரமாக பாமாவின் 'பொன்னுத்தாயி' கதையில் இடம் பெறும் பொன்னுத்தாயின் பாத்திரம் அமைந்துள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. பழனியப்பன் மு, பெண்ணிய வாசிப்பு, ப.4
2. பஞ்சாங்கம் க, புனைவுகளும் உண்மைகளும், ப.105

3. பஞ்சாங்கம், பெண்-மொழி – புனைவு, ப.71
4. பிரேமா இரா, (தொகுப்பு) பெண்ணியக் கதைகள், பக். 5
5. மேலது. பக்.112